# துபாயின் ஜெபல் அலி நகரில் பாரத் மார்ட்டுக்கு மெய்நிகர் முறையில் அடிக்கல் நாட்டப்பட்டது

பிப்ரவரி 14, 2024

1. துபாயில் உள்ள ஜெபல் அலி சுதந்திர வர்த்தக மண்டலத்தில் டிபி வேர்ல்ட் நிறுவனத்தால் கட்டப்படவுள்ள பாரத் மார்ட்டுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் துபாய் ஆளுநர், துணை குடியரசுத் தலைவர், பிரதமர் மேதகு ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தூம் ஆகியோர், 2024 பிப்ரவரி 14 அன்று அடிக்கல் நாட்டினர்.

2. ஜெபல் அலி துறைமுகத்தின் மூலோபாய இருப்பிடத்தையும், தளவாடங்களின் வலிமையையும் பயன்படுத்தி பாரத் மார்ட் இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் இருதரப்பு வர்த்தகத்தை மேலும் ஊக்குவிக்கும் என்று இரு தலைவர்களும் நம்பிக்கை தெரிவித்தனர். வளைகுடா நாடுகள், மேற்கு ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் யூரேசியாவில் உள்ள சர்வதேச வாங்குபவர்களை அணுகுவதற்கான ஒரு சிறந்த தளத்தை வழங்குவதன் மூலம் இந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் துறைகளின் ஏற்றுமதியை மேம்படுத்துவதில் பாரத் மார்ட் முக்கிய பங்கு வகிக்க முடியும் என்று பிரதமர் கூறினார்.

**துபாய்**
**பிப்ரவரி 14, 2024**